RESEARCH ARTICLE

IOR PRESS

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s22212

# இறை வழிபாட்டில், ‘உறியடி’ பெறுமிடம்

**ச. ஈஸ்வரன் [அ, *]**

[அ] தமிழ்த்துறை, தேசியக்கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி-620001, தமிழ்நாடு, இந்தியா

# The Importance of “Uriyadi” in the Worship of God

**S. Eswaran [a, *]**

[a] Department of Tamil, National College (Autonomous), Tiruchirappalli-620001, Tamil Nadu, India

* Corresponding Author: eswaran.nct@gmail.com

Received: 22.09.2022
Revised: 11-11-2022
Accepted: 13-11-2022
Published: 01-12-2022

Check for updates

**ABSTRACT**

Folk arts are divided into three categories: social, religious, and professional. Moreover, professional arts are subject to the distinction between professional and non-professional arts. Among the above classifications, 'Uriyadi' falls under the category of religious arts. In Vaishnava shrines, the Uriyadi Utsav festival is celebrated every year for 11 days, starting from the chanting of Gayatri Mantras the day after the full moon (Pournarmi) in the Tamil month of Aavani, to the day after Gokulashtami. It will happen on the tenth day. Sri Rukmani's wedding will take place the next day. The Uriyadi festival is celebrated grandly at Varagur, near Thirukattupalli, in the Thanjavur district. The 'Uriyadi' festival is celebrated in every Vaishnava shrine to commemorate the playful activities of Sri Krishna, who stole Navaneetham (butter). "Uri" is a mat threaded with thin bamboo sticks, rolled up, and placed inside it, with a fresh earthen pot inside which snacks are tied tightly like a long drum and hung on one end of the bamboo Uri. The rope tied to the other end of the bamboo is arranged in such a way that when a person pulls it downwards, the rope goes upwards, and when he loosens the rope, the Uri goes downwards. Uriyadi is the process of beating the earthen pot, thus arranging and picking up the snacks from it. ‘Uri’ and ‘Climbing Greasy Pole’ are not just games. These are Sri Krishna's acts, and he has philosophies behind them. Uriyadi is performed to attain moksha or bliss (to acquire and attain perfect knowledge).

**Keywords:** Uri, Uriyadi, Pournarmi, Sri Krishna, Vaishnavam

## முன்னுரை

நாட்டுப்புறக்கலைகள், மக்களின் சமூக வாழ்வு மற்றும் சமய நெறி முறைமைகளை எடுத்துரைக்கின்றன. நாட்டுப்புறக்கலைகளுள் ஒன்று, ‘உறியடி’. நாட்டுப்புறக் கலைகள் சமூகம் சார், சமயம் சார், தொழில்சார் என்றவாறு மூன்று வகைகளாகப் பகுக்கப்பெற்றுள்ளன. மேலும் தொழில் முறைக் கலைகள், தொழில்முறை அல்லாத கலைகள் என்ற பாகுபாட்டிற்கு உட்படுத்தப்பெறுகின்றன. மேற்கண்ட வகைமைப்பாடுகளுள் ‘உறியடி’ சமயம் சார் கலைகள் எனும் பகுப்பின் கீழ் அமைகிறது. இக்கட்டுரையில் இறை வழிபாட்டில், ‘உறியடி’ பெறுமிடத்தை ஆராயலாம்.

## உறியடி - தோற்றம்

வைணவத் திருத்தலங்களில், உறியடி உற்சவ விழா ஒவ்வோர் ஆண்டும் ஆவணி மாதம் பௌணர்மிக்கு மறுதினம் காயத்ரி ஜபத்தன்று தொடங்கி கோகுலாஷ்டமிக்கு மறுநாள் வரை

 DOI: 10.34256/irjt224s22212

11 நாட்கள் கொண்டாடப்பெறும்.

உறியபடி பத்தாம் நாள் அன்று நிகழும். மறுநாள் ஸ்ரீ ருக்மணி கல்யாணம் நடைபெறும். தஞ்சாவூர் மாவட்டத்தில் திருக்காட்டுப்பள்ளிக்கு அருகே உள்ள வரகூரில் இந்த உறியடித்திருவிழா சிறப்பாகத் தொடர்ந்து கொண்டாடப்பெற்று வருகிறது.

## இறைவன்

ஸ்ரீகிருஷ்ணன் நவநீதம் (வெண்ணெய்) திருடிச் செய்த லீலைகளை நினைவு கூறும் பொருட்டு வைணவத் திருத்தலங்கள் தோறும் ‘உறியடி’ உற்சவம் கொண்டாடப்படுகிறது. இந்த ஆண்டு 24.08.2022 அன்று உறியடி நிகழ்ச்சி ‘வரகூரில்’ நடந்தது. கட்டுரையாளர் பார்வையாளராகப் பங்கு பெற்றார்.

கி.பி. 16-ஆம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்த ஸ்ரீ நாராயண தீர்த்தர் இயற்றி அருளிய “ஸ்ரீ க்ருஷ்ண லீலா தரங்கிணி” என்ற நூலில் உறியடி பற்றிய குறிப்பு காணப்படுகிறது. இந்நூல் வடமொழியில் அமைந்துள்ளது. ஸ்ரீ கிருஷ்ணனின் பிறப்பு முதல் திருமணம் வரையிலான நிகழ்வுகள், பல செய்யுள்கள், பாடல்கள், உரைநடை ஆகியனவற்றின் வழி எடுத்துரைக்கப் பெற்றுள்ளன. அவற்றுள் ஸ்ரீ கிருஷ்ணர் செய்த சிறுவயது விளையாட்டுகளை விவரிக்கும் இடத்தில் “உறியடி” பற்றிய குறிப்பு உள்ளது.

“அயே ஸகி யசோதே... நந்தஸூனு.” (Sri Narayana Kavi, 1983)

மேற்கண்ட உரைநடைப் பத்தியில் உறியடி பற்றிய விளக்கம் பின்வருமாறு அமைந்துள்ளது. “சில இடங்களில் மிக்க உயர்ந்த இடத்தில் உள்ள உறிகளில் உள்ள சட்டிகளைத் தளிர் போன்ற தன் கைகளில் உள்ள பிரம்பு முதலான கம்புகளால் துளையிட்டு அதிலிருந்து பெருகிவரும் பால், தயிர் இவைகளின் ஒழுக்குகளைத் தான் பானம் செய்தும், மற்றவர்களையும் குடிக்கும்படிச் செய்து கொண்டும், சட்டி, பானைகளை உடைப்பவனாகவும்” என்றவாறு குறிப்பு அமைந்துள்ளது.

ஸ்ரீ நாராயண தீர்த்தர் வரகூரில் வாழ்ந்த காலத்திலேயே இந்நூல் இயற்றப்பெற்றுள்ளது. இவரே வரகூரில் முதன் முதலில் உறிபடி உற்சவத்தை முறைப்படி (பஜனையுடன்) ஆரம்பித்து வைத்தவர் என்ற குறிப்பு கி.பி. 1983இல் வெளியிடப்பட்ட தமிழ்ப் பதவுரையுடன் கூடிய ஸ்ரீ கிருஷ்ணலீலா தரங்கிணி எனும் நூலில் (ப. 133) குறிக்கப்பெற்றுள்ளது (Perumal, 2008).

கி.பி. 1868 முதல் 1935 வரை வரகூரில் வாழ்ந்தவராகக் கருதப்படும் ஸ்ரீ நாராயணகவி என்பவர், வரகூரில் நடைபெற்று வந்த உறியடி உற்சவத்தை விவரிக்கும் வகையில், வடமொழியில் “ஸ்ரீ க்ருஷ்ண சிக்யோத்ஸவ ப்ரபந்தம்” எனும் நூலை இயற்றி உள்ளார். தமிழகத்தில் உறியடி உற்சவம் குறித்த முழுமையான, முதன்மையான நூல் இதுவே.

## உறியடி

“உறி என்பது சிறுசிறு மூங்கில் கம்புகளைக் கொண்டு பாய் போல் முடைந்து, அதைச் சுருட்டி, அதன் உள்ளே, நடுவில் புதிய மண் சட்டியில் ‘தின்பண்டங்களை’ வைத்து, நீண்ட மத்தளம்போல் இறுகக் கட்டப்பட்டு, குறுக்கு மூங்கிலின் ஒரு நுனியில் தொங்க விடப்பட்டிருக்கும். மூங்கிலின் மறு நுனியில் கட்டப்பட்டிருக்கும் கயிற்றைச் சூத்திரதாரன் கீழ்நோக்கி இழுக்கும்போது உறி, மேல் நோக்கியும், அவன் கயிற்றைத் தளர்த்தும் பொழுது, உறி கீழ்நோக்கியும் செல்லும் வகையில் அமைக்கப்பட்டிருக்கும்.” (Sri Narayana Kavi, 1983)இவ்வாறு அமைக்கப்பட்டிருக்கும் உறியை அடித்து, கலயத்தில் (மண்சட்டி) இருக்கும் பண்டங்களை எடுக்கும் நிகழ்வே உறியடி எனப்படுகிறது.

## விளையாட்டு

அந்நாளில் கோகுலத்தில் மாயக்கண்ணன் / கிருஷ்ணன் கோபியர்களின் வீட்டில் உறியில் வைத்திருந்த வெண்ணெய்த் தாழியை உடைத்த திருவிளையாடலை நினைவு கூர்கிறது இவ்வுறியடி.

உயர்ந்த வழுக்கு மரத்தின் உச்சியில் கட்டப்பட்டிருக்கும் தின்பண்டங்களுடன் வெண்ணெயும் கொண்ட உறியையும் எடுப்பதற்குப் போட்டியிடும் பக்தர்களின் கூட்டம் ஒருபுறம். அந்த பக்தர்களின் மீது தண்ணீரை வீசியடித்து திணறடிக்கும் மற்றொரு பக்தர் கூட்டம் மறுபுறம். மேலே கட்டப்பட்டிருக்கும் உறியில் உள்ள பொருள் எடுக்கப்படும்வரை இரவு தொடங்கி இவ்வுறியடி நிகழ்ச்சி மறுநாள் அதிகாலைவரை நடைபெறும்.

## நம்பிக்கை

வழுக்கு மரத்தின் உச்சி அருகே உயரமான உறியில் உள்ள வஸ்துவே (தின்பண்டங்கள்) பரமாத்மா. அதை உடைத்து / எடுத்து - அடைய முற்படும் மக்கள் / பக்தர்கள் ஜீவாத்மாக்கள். அதை அடைய முயலும்போது ஏற்படும் தடங்கல்களே வீசி அடிக்கப்படும் தண்ணீர். பரமாத்மாவை அடைய முற்படும் யோக சாதனையின் போது பலமுறை ஏமாறலாம் வழுக்குமரம்போல சறுக்க நேரிடலாம். இவ்வாறு ஏற்படும் இடையூறுகளுக்கு இடையே உச்சியில் இருக்கும் அந்த வஸ்துவையே இலட்சியமாகக் கொண்டு இறையருள் பெறலே மனித நோக்கம். இத்தத்துவத்தை எளிமையாகவும் / தெளிவாகவும் வெளிபடுத்துவதே இவ்வுறியடித் திருவிழா.

"உறியடியோ கோவிந்தோ!"

"உறியடியோ கோவிந்தோ!"

என்ற ஆன்மீக அன்பர்களின் பக்திக்குரல் ஒன்று மட்டுமே அப்போது வரகூரில் கேட்கும். இரவு பத்து மணிக்கு அபிஷேகம் நிறைவடையும். பின், சிறப்பு அலங்காரத்தில் நின்ற திருக்கோலத்தில், இடக்கையில் பெரிய வெள்ளிக்குடத்தை அணைத்திருக்கும் படி 'பாலகிருஷ்ணர்' காட்சி தருவார். அக்குடத்தில் வெண்ணெய் ததும்புகிறது.

உறியடி அன்று வரகூரே கோகுலம். அங்குள்ள அந்தணர்களே கோபியர்கள். பெருமாள் கோபாலனாகத் தோற்றமளிக்கிறார்.

இறைவனுக்குப் பின்னால், பக்தர்களால் அங்கப்பிரதட்சணம் (படுத்து உருண்டு வருதல்) நடக்கிறது. இறைவன் உலாவின் முன்புறம் வேதங்களும், பஜனைகளும், பிரபந்தங்களும் பாடப்பெறுகின்றன. வரகூரில் உள்ள 'கடுங்கால்' எனும் வாய்காலில் குளித்து, நாமம் இட்டுக் கொண்டு உறியடி விளையாட்டில் பங்கேற்க ஆர்வமுடன் வருகின்றனர் பக்தர்கள்.

## இறைவனின் லீலைகள்

உறியடியும் வழுக்கு மரமும் விளையாட்டுகள் மட்டுமல்ல. ஸ்ரீ கிருஷ்ண லீலைகளான இவைகட்குத் தத்துவங்கள் உண்டு. மோட்சம் / பேரானந்தநிலை அடைய (அறிவு பெற்றுப் பூரண ஞானம் பெற) உறியடி நிகழ்த்தப் பெறுகிறது. உறியடியில் இருக்கும் தின்பண்டங்கள் ஈடு இணையற்ற பிரசாதங்களாகும்.

## முடிவுரை

வைணவத்திருத்தலங்களுள் நிகழும் சமயம் சார் கலைகளுள் ஒன்று உறியடி ஒவ்வோர் ஆண்டும் ஆவணி மாதம் பௌணர்மி மறுநாள் அன்று ஸ்ரீ கிருஷ்ணர் ஜெயந்தி விழாவானது தொடங்கப்பெறும். பதினொரு நாட்கள் நடைபெறும் விழாவில் இந்த 'உறியடி' நிகழ்ச்சி பத்தாம் நாளில் நிகழ்த்தப்பெறுகிறது. தஞ்சாவூர் அருகே உள்ள வரகூரில் 'உறியடி கீதம்' (உறியடியோ கோவிந்தோ) கேட்கப் பல காதுகள் வேண்டும். 'உறியடி' ஒரு வீர விளையாட்டாகவும் கருதப்படுகிறது. கிருஷ்ணனின் லீலைகளை இந்த 'உறியடி' நிகழ்வு நினைவு கூறுகிறது. 'உறியடி'யின் போது வழுக்கு மரம் ஏறுவர். மனிதன், பல சோதனைகளையும் இடையூறுகளையும் கடந்து அனுபவங்களால் அறிவு பெற்று பேரானந்த நிலை எனும் (இறைப்) பரிசைப் பெறவேண்டும் என்பதைக் குறிக்கவே இந்நிகழ்வு

நிகழ்த்தப்பெறுகிறது. ‘உறியடி’ யை அடிப்படையாகக் கொண்டே பொங்கல் திருநாளை முன்னிட்டுப் பல ஊர்களில் பானை உடைத்தல் போட்டி நிகழ்த்தப்பெறுகிறது. மேலே கட்டியுள்ள பானையை உடைக்கும் போது முகத்தில் தண்ணீரைப் வீசி அடிப்பதை இன்றும் பார்க்கலாம். ‘உறி’ப்பானையை எளிதில் உடைக்க / எடுக்க இயலாதவாறு அலங்கரித்து வைத்திருப்பர். ‘உறி’ அடித்தபின் பரிசுப்பொருளை இறைவனுக்கோ அல்லது ஏற முயன்றோருக்கோ பகிர்ந்தளிப்பர். உறியில் வைக்கப்பட்டிருந்த பிரசாதங்களை அனைவருக்கும் அளித்து இன்புறுவர் “உறி” ஏறிய வீரர்கள். “உறியடியோ கோவிந்தோ!”. என்ற நல்வார்த்தை காதில் விழ வரகூர் திருத்தலம் செல்லல் நலமே பயக்கும். உறியின் மீது உள்ள ஒப்பற்ற பொருள் நமக்கும் கிட்டட்டும். நாமும் அனைத்து விதமான வளமும் நலமும் பெறுவோம். பிறரையும் பெற வைப்போம்.

## References


Sri Narayana Kavi, (1983) Sri Krishna Sikyosthava Prabhantham, Sri Narayana Theerthar Arakattalai, Chennai, India.

Perumal (2008) Varagur Sri Venkadesapperumal Kovil Utsavangal, Sri Madam, Varagur, India



**Funding:** No funding was received for conducting this study.


**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**


Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License